**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை**

முன்னிலை: திரு.து.செந்தில்ராஜா, பி.எஸ்சி.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2021–ம் ஆண்டு மார்ச் மாதம் 24–ம் நாள் புதன் கிழமை

இடைநிலை மனுஎண்.1/2020
பழைய இ.ம.எண்.659/2014
இதன்
அசல் வழக்கு எண்.260/2019
பழைய அ.வ. எண்.242/2012

1. பி. கோபால்
2. ஜி. ஸ்ரீராம் ....மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. செயல் அலுவலர்,
அருள்மிகு வாலீஸ்வரர் கோவில்,
வாலிகண்டபுரம் கிராமம்,

2. உதவி பொறியாளர்,
இயக்கலும் காத்தலும்,
தமிழ்நாடு மின் கழகம்,
வாலிகண்டபுரம் கிராமம் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 06.03.2021ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சஞ்சீவிராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.செந்தாமரைக்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்களுக்கு ஆதரவாக அசல் வழக்கில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 12, விதி 6–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>

2. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். இந்த மனுதாரர்களால், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக சட்ட நடைமுறையைத் தவிர வேறு வழிகளில் மனுதாரர்களை அசல் வழக்கில் கண்ட சொத்துக்களின் சுவாதீனத்தில் இருந்து வெளியேற்றாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மேலும் 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் கண்ட சொத்துக்களில் இருந்து மனுதாரர்களை வெளியேற்றுவதற்காக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.327/2012 தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களின் சுவாதீனத்தை ஒப்புக்கொண்டுள்ளதால் இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய சுவாதீனம் பொறுத்து வழக்கு விசாரணை நடத்த தேவையில்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரரின் ஒப்புதலின் அடிப்படையில் இந்த அசல் வழக்கில் மனுதாருக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>

3. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கு நிலை நிற்கத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாருக்கு மட்டும் அசல் வழக்கு சொத்தில் கூரை வீடு அமைத்து குடியிருந்து வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் குத்தகை ஒப்பபந்தத்திற்கு மாறாக 1ம் மனுதாரர், 2ம் மனுதாரருடன் சேர்ந்து அசல் வழக்குச் சொத்தில் சட்ட விரோதமாக கெட்டி மெத்தை வீட்டை எவ்வித அனுமதியும் இல்லாமல் கட்டியுள்ளார். இதுகுறித்து 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு 2012ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் அசல் வழக்குச் சொத்திற்குண்டான வாடகை பாக்கியை கேட்டும், அதில் கட்டியுள்ள கெட்டி மெத்தை கட்டிடத்தை இடித்து காலி நிலமாக ஒப்படைக்க வேண்டியும், குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்தும் அறிவிப்பு அனுப்பினார். பின்னிட்டு அசல் வழக்கில் கண்ட சொத்துக்களையும், அதற்குண்டான வாடகை பாக்கியையும் 1ம் எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டி இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.327/2012 தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் குத்தகை உரிமத்தை ரத்து

செய்துள்ளதால் மனுதாரர்களின் அனுபோகம் சட்ட விரோதம் ஆகும். மனுதாரர்கள் சட்ட விரோதமாக தொடர்ந்து அசல் வழக்கில் கண்ட சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதற்காகவும், அசல் வழக்கு 327/2012 ஐ காலதாமதப் படுத்துவதற்கும் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

<u>தீர்வு</u>

6. இருதரப்பிலும் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதும், 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு எதிராக சுவாதீனம், வாடகை பாக்கி மற்றும் எதிர்கால வரும்படி கேட்டு அசல் வழக்கு எண்.327/2012 தாக்கல் செய்துள்ளதும் தெரியவருகிறது.

7. மனுதாரர்கள் தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரரின் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் அவர்கள் வாடகை தாரர்களாக இருந்து வருகிறார்கள் என்றும் கூறியுள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் மனுதாரரிடம் மட்டுமே தாவா சொத்துக்களை குத்தகைக்கு விட்டதாகவும், அவர் வாடகை பாக்கி வைத்துள்ளதாகவும் மேலும் குத்தகை நிபந்தனைகளை மீறி தாவா சொத்தில் கெட்டி மெத்தை வீடு கட்டியுள்ளதாகவும் கூறியிருப்பதால் இருவழக்குகளிலும் இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில்தான் வழக்கினை தீர்வு காண முடியும் என்பதால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலை நிற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

8. எனவே இம்மனுவை செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021–ம் ஆண்டு மார்ச் மாதம் 24–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறியப் பகரப்பட்டது.

ஒம்./–து.செந்தில்ராஜா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள்:– இல்லை

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை

ஒம்./–து.செந்தில்ராஜா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.